டிரஸ்ட் ஆரம்பித்திட...
புதிதாக டிரஸ்ட், பவுண்டேஷன், கட்சி, ஆசிரமம், சங்கம், மன்றம், கழகம் பதிவு செய்திட தொடர்பு கொள்ளவும்.
பகவான் பவுண்டேஷன்
96004 02096

நல்லவே எண்ணல் வேண்டும்..,
எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"
★SAKKRA VIYUGAM★
DAILY NEWS PAPER

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 138 12.11.2025 WEDNESDAY IPPASI : 25 PRICE : RS.5/-
மலர் : 01 இதழ் : 138 12.11.2025 புதன்கிழமை ஐப்பசி : 25 விலை : ரூ.5/–

3 மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை மத்திய அரசு விரைந்து கட்டித்தர வேண்டும்: அமைச்சர் மா.சுப்பிரமணியன்

4 "திமுகவை விரட்ட அதிமுக ஒன்றுசேர வேண்டும்" பாஜக மாநில பொதுச் செயலாளர் கார்த்தியாயினி நேர்காணல்

2 அமைச்சர் அன்பில் மகேஸ் தலைமையில் பாடத்திட்ட மாற்றம் குறித்து நவ.23, 24ல் ஆலோசனை

# மயிலாடுதுறை மாவட்ட மீனவர்கள் 14 பேர் கைது: மத்திய அமைச்சருக்கு முதல்வர் கடிதம்

மயிலாடுதுறை: நவ.12-

மயிலாடுதுறை மாவட்ட மீனவர்கள் 14 பேரை எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படையினர் நேற்று முன்தினம் கைது செய்தனர். மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் அருகே வானகிரி மீனவக் கிராமத்தைச் சேர்ந்த ராமையன் என்பவருக்கு சொந்தமான விசைப்படகில் கடந்த 3ம் தேதி ராஜேந்திரன், சிவதாஸ், குழந்தை வேல், ரஞ்சித், ராஜ், கலை, குகன், பிரசாத், அகிலன், ஆகாஷ், ராபின், ராஜ்குமார், தரங்கம்பாடி கோவிந்து, கடலூர் பாரதி ஆகிய 14 மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

கடந்த 4ம் தேதி ஜெகதாப்பட்டினம் அருகே கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது படகு பழுதடைந்தது. இதையடுத்து, அந்த வழியாக வந்த பிற மீனவர்களின் உதவியுடன் படகை ஜெகதாப் பட்டினம் கொண்டுசென்று, பழுதுநீக்கம் செய்த பின்னர், அங்கிருந்து கடந்த 8ம் தேதி மீண்டும் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு மீண்டும் படகு பழுதடைந்து கடலில் தத்தளித்த நிலையில்,



அங்கு வந்த இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி 14 மீனவர்களையும், படகுடன் கைது செய்து, இலங்கை மயிலடி மீன்பிடி துறைமுகத்துக்கு அழைத்துச் சென்றுள்ளனர். பின்னர் கைது செய்யப்பட்ட 14 பேரையும் ஊர்க்காவல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி யாழ்ப்பாணம் சிறையில் அடைத்தனர்.

ஏற்கெனவே, கடந்த 2ம் தேதி நாகை மாவட்டம் நம்பியார் நகர் மற்றும் அக்கரைப் பேட்டை மீனவ கிராமங்களைச் சேர்ந்த 31 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர். தற்போது மேலும் 14 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர்கள் அனைவரையும் விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என மீனவர்களின் குடும்பத்தினர் வலியுறுத்தி உள்ளனர்.

முதல்வர் கடிதம்: இதற்கிடையே மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது: நவ.9ம் தேதி இரவு, மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 14 மீனவர்களையும், அவர்களது படகையும் இலங்கை கடற்படையினர் சிறை பிடித்துள்ளதை தங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறேன்.

அந்த வகையில் இதுவரை 128 தமிழக மீனவர்கள் சிறையில் உள்ளனர். 248 மீன்பிடிப் படகுகளும் இலங்கை காவலில் உள்ளன. நீண்டகாலமாக உள்ள இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு கண்டு, சிறை பிடிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும் விடுவிக்கவும், படகுகளை மீட்கவும் தேவையான அனைத்து தூதரக நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவேண் டும். இவ்வாறு கடிதத்தில் முதல்வர் தெரிவித்துள்ளார்.

## தமிழ்நாடு மருத்துவ துறை அமைச்சுப்பணி அலுவலர் சங்க மாநில மத்திய செயற்குழு கூட்டம்

திருச்சி, நவ.12-

வருகின்ற 15.11.2025 சனிக்கிழமை காலை 10:30 மணி அளவில் மாநில தலைவர் (பொ) ஆ. செந்தில் வேல் தலைமையில் *திருச்சி ஆனந்தா ஹோட்டல்(ராசி ஏசி மினி ஹாலில்) மாநில மத்திய செயற்குழு கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு எஸ்.முத்துரமேஷ் வரவேற்புரை ஏற்ற உள்ளார். பின்பு பி.ஜெ. ரவிக்குமார் மற்றும் ஒன்றிய திருச்சி மாவட்ட தலைவர் ஜி. சதீஸ்பாபு முன்னிலை வைத்து, இக்கூட்டத்திற்கு



சிறப்பு அழைப்பின் ஒன்றிய மாநில தலைவர் வெ.மகேந்திரகுமார், மேனாள் மாநிலத் தலைவர்கள் என். தண்டபாணி மற்றும் ப.தேசிங்குராஜான், அமைப்புச் செயலாளர் பாலமுருகன், மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இளங்கோ வருகை புரிந்து மாநிலபொருளாளர் த.பார்த்தசாரதி நன்றி உரை கூற உள்ளனர்...

இக்கூடடத்தில் மாநில நிருவாகிகள், மாவட்ட தலைவர்கள், மற்றும் மத்திய செயற்குழு உறுப்பினர்கள். உள்ளிட்ட அனைவரும் பங்கேற்று சிறப்பிக்க வேண்டும் என மாநில மையம் மாநில தலைவர் (பொ) ஆ.செந்தில்வேல் கேட்டுக் கொண்டுள்ளார்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

அழையுங்கள்! வாசகர்களே!!

தங்கள் பகுதிகளில் நடக்கும் தாங்கள் காணும் விரும்பத்தகாத செயல்கள், அவலங்கள், சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகள், பெண்களுக்கு எதிரான கொடுமைகள் மற்றும் சமூகத்தில் நடக்கும் தங்களால் தட்டிக் கேட்க இயலாத அநீதிகளை எங்களுக்கு உடனுக்குடன் தெரியப்படுத்தவும். (ரகசியம் பாதுகாக்கப்படும்)
(24 x 7)

88705 00000
sakkraviyugam2025@gmail.com

## தேவர் திருமகனார் வாழ்க்கை வரலாற்றை தழுவிய தேசியத் தலைவர் திரைப்படம் வெளியீடு

திருப்பூர், நவ.12-

திருப்பூர் ஊத்துக்குளி சாலையில் உள்ள ரேவதி திரையரங்கில், அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சியின் தேசிய தலைவர்களின் ஒருவரான பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருமகனார் வாழ்க்கை வரலாற்றை தழுவிய, திரைப்படமான தேசிய தலைவர் திரைப்படத்தினை அகில இந்திய பார்வர்டு பிளாக் திருப்பூர் புறநகர் மாவட்ட செயலாளர் தேளி கே.காளிமுத்து தேவர் ஏற்பாட்டில், நவம்பர் பத்தாம் தேதி மாலை 6 மணிக்கு ஒடிய காட்சி முழுவதற்கும், தொகையை புறநகர் மாவட்ட செயலாளர் தேளி கே.காளிமுத்து தேவர் ஏற்றுக்கொண்டார். மேலும் மண்ணரை பேருந்து நிலையத்தில் திருப்பூர் மாவட்ட தேவர் பேரவை மண்ணரை கிளை சார்பில் பட்டாசு வெடித்தும், ஆள் உயர மாலை அணிவித்தும் அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்பு செய்தியாளர்களை சந்தித்த அவர்,

தேசிய தலைவர் திரைப்படம் மாபெரும் வெற்றி அடைய வைத்த பொதுமக்களுக்கு நன்றிகளை தெரிவித்தார். இதுபோன்ற சுதந்திர போராட்ட தியாகிகள் அனைவரது வாழ்க்கை வரலாற்றையும் திரைப்பட தயாரிப்பாளர்கள்



மற்றும் இயக்குனர்கள் இயக்குவதற்கு முன்வர வேண்டும். பசும்பொன் தேவர் திருமகனாரை போன்ற தேசிய தலைவர்களை ஜாதிய வண்ணத்தில் கட்டமைக்க வேண்டாம் எனவும் மேலும், பசும்பொன் கிராமத்தில் தேசியமும், தெய்வீகமும் எனது இரு கண்கள் என வாழ்ந்த பசும்பொன் முத்துராமலிங்க தேவர் ஜெயந்தி விழாவில் வருகை தரும் பொது மக்களுக்கு வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என இந்த ஆண்டு தமிழக அரசு சார்பாக மண்டபம் அமைத்து தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது அதற்கான நிதி ஒதுக்கி வேலைகளும் நடந்து வருகிறது மேலும் மிகப்பெரிய நிழல் கூரை தார் சாலை வசதி போன்ற பல்வேறு ஏற்பாடுகளை தமிழக அரசு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் உசிலம்பட்டியில் உள்ள கல்வித்தந்தை பி கே மூக்கையா தேவர் அவர்களுக்கு 6,25 கோடி மதிப்பீட்டில் மணிமண்டபமும் கட்டப்பட்டு வருகிறது அதற்கு தமிழக அரசுக்கு நன்றியை தெரிவித்தார் இந்த நிகழ்வில் மாவட்டத் தலைவர் நெல்லை தாமோதரன், மாவட்ட துணை தலைவர் டெல்டா தனசேகர், சேதுபதி, செல்வம்,

வேலுமணி,இசக்கி,சுப்பையா, பிரபாகரன், ஜீவா, தங்கராஜ், பூமிநாதன், அழகு பாண்டி அரசப்பன்,லோகேஷ்,

ரவி, கார்த்திக், செந்தில்குமார்,மணி,கோகுல் மற்றும் மாவட்ட மாநகர நகர ஒன்றிய நிர்வாகிகள் 1000க்கும் மேற்பட்டோர் பங்கேற்றன

## சின்னமனூர் அருகே விவசாயி படுகொலை உறவினர்கள் சாலை மறியல் சின்னமனூர் காவல் துறையினர் விசாரணை.!

தேனி நவ.12

தேனி மாவட்டம் சின்னமனூரைச் சேர்ந்தவர் பால்பாண்டி (60) இவர் சின்னமனூர் அருகே உள்ள சீலையம்பட்டியில் குத்தகைக்கு வயல் வாங்கி அதில் நெல் விவசாயம் செய்து தற்போது அறுவடை முடிந்து நெல் கதிர் நெல்மணிகளை நெல் களத்தில் வைத்து பாதுகாத்து வந்துள்ளார்.

காலையில் யாரும் எதிர்பாராதமாக களத்தில் அவர் நின்று கொண்டிருக்கும் பொழுது இருசக்கர வாகனத்தில் தலையில் ஹெல்மெட் அணிந்த இரண்டு நபர்கள் அவரை கழுத்தில் குத்தியும் வயிற்றில் வெட்டியும் கொலை செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.




சம்பவம் அறிந்த உறவினர்கள் குமுளி தேனி தேசிய நெடுஞ் சாலையில் குற்றவாளிகளை உடனே கைது செய்யக்கோரி பால்பாண்டியின் உடலை எடுக்க விடமாட்டோம் என்று கூறி திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த காவல் ஆய்வாளர் பாலாண்டி சாலை மறியல் ஈடுபட்டு வந்தவர்கலுடன் பேச்சுவார்த்தை செய்த பின் சாலை மறியல் கைவிடப்பட்டது.

உடலை கைப்பற்றிய காவல் துறையினர் பால்பாண்டியின் உடலை உடல் கூறு ஆய்வு செய்வதற்காக தேனி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் குற்றவாளிகளை உடனே கைது செய்கிறோம் என்று கூறிய சின்னமனூர் காவல் துறையினர் கொலை வழக்கு குறித்து வழக்கு பதிவு செய்து சிசிடிவி கேமரா வீடியோவை கொண்டு விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

காலை நேரத்தில் விவசாயி ஒருவர் படுகொலை செய்யப்பட்டதை அப்பகுதி மக்களிடையே பரபரப்பு ஏற்படுத்தியது. ...

# அமைச்சர் அன்பில் மகேஸ் தலைமையில் பாடத்திட்ட மாற்றம் குறித்து நவ.23, 24ல் ஆலோசனை



சென்னை, நவ.12-
பள்ளிக்கல்வித் துறையில் பாடத்திட்ட மாற்றம் தொடர்பான முதல் ஆலோசனைக் கூட்டம் அமைச்சர் அன்பில் மகேஸ் தலைமையில் நவ. 23, 24ம் தேதிகளில் நடைபெற உள்ளது.

மத்திய அரசின் தேசிய கல்விக் கொள்கை 2020க்கு தமிழக அரசு தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. இதற்கு மாற்றாக, மாநிலத்துக்கு என பிரத்யேக கல்விக் கொள்கையை வடிவமைத்து தமிழக அரசு வெளியிட்டது. இதையடுத்து, புதிய பாடத்திட்டத்தை வடிவமைப்பதற்கான வல்லுநர் குழு மற்றும் அதை மேற்பார்வையிட்டு ஒப்புதல் அளிப்பதற்கான உயர்நிலைக் குழு என 2 குழுக்களை பள்ளிக் கல்வித் துறைசமீபத்தில் நியமனம் செய்தது.

உயர்நிலைக் குழுவில் அமைச்சர் அன்பில் மகேஸ், இஸ்ரோ தலைவர் வி.நாராயணன், கிரிக்கெட் வீரர் அஸ்வின் உள்ளிட்ட 16 பேரும், பாடத்திட்ட வடிவமைப்புக் குழுவில் திட்டக்குழு உறுப்பினர் சுல்தான் அகமது இஸ்மாயில், விஞ்ஞானி த.வி.வெங்கடேஸ்வரன் உள்ளிட்ட 20 பேரும் உள்ளனர். இந்நிலையில், பாடத்திட்டமாற்றம் தொடர்பாக சென்னையில் நவ.23, 24ம் தேதிகளில் ஆலோசனை நடைபெற உள்ளது. அமைச்சர் அன்பில் மகேஸ் தலைமை வகிக்கிறார். இதில்பங்கேற்க குழு உறுப்பினர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். தற்போதைய காலச் சூழலுக்கு ஏற்ப பல்வேறு புதிய தொழில்நுட்பங்கள், தகவல்களை பாடத்தில் சேர்க்க திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிகிறது.

# திமுகவுக்கு ‘செக்’ வைக்கவே அதிமுக வழக்கு: பழனிசாமி விளக்கம்




கோவை, நவ.12-
எஸ்ஜஆர் விவகாரம் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் திமுக தவறான தகவலை பதிய வைத்தால் அதை சரிசெய்யவே அதிமுக வழக்கில் இணைந்துள்ளது என்று கட்சியின் பொதுச்செயலாளர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் பழனிசாமி நேற்று செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: கோவையில் மக்கள் நடமாட்டம் உள்ள பகுதியில் மாணவி கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டுள்ளார். திமுக ஆட்சியில் பெண்கள், மாணவிகள், சிறுமிகளுக்கு பாதுகாப்பு இல்லை. திமுக ஆட்சியில் பாலியல் வன்கொடுமைகள் சர்வசாதாரணமாக நடக்கின்றன. சட்டம் ஒழுங்கு முற்றிலுமாக சீர்குலைந்துள்ளது. திமுக ஆட்சியில் 6,999 சிறுமிகள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும், அதற்கு ரூ.104 கோடி நிவாரணம் கொடுத்ததாகவும் திமுகவின் சமூக நலத்துறை அமைச்சரே பெருமையாகப் பேசியுள்ளார். ஒரு திறமையற்ற, பொம்மை முதல்வரிடம் காவல்துறை இருப்பதால், இப்படியான பாலியல் வன்கொடுமைகள் நடக்கின்றன.

21 ஆண்டுகளுக்கு பிறகு தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் நடத்தப்படுகிறது. இதற்கு முன்பு 8 முறை இந்த திருத்தம் செய்யப்பட்டுள்ளது. வாக்காளர் பட்டியலில் இறந்தவர்கள், வீடு மாறி சென்றவர்கள் பெயர்கள் அதிகளவில் இடம்பெற்றுள்ளது. இதுபோல உள்ளவர்களை நீக்கி, தகுதியானவர்களை இடம்பெற செய்வதே எஸ்ஐஆர்.


ஆனால், திமுகவும், அதன் கூட்டணிக் கட்சிகளும் எஸ்ஐஆர் என்றாலே அலறுகிறார்கள். காலக்கெடு போதாது என்கிறார்கள். இதற்காக பிஎல்ஓக்கள் நியமிக்கப்பட்டுள்ளனர், ஒரு மாதம் காலக்கெடு வழங்கப்பட்டுள்ளது. 300 வீடுகள் இருக்கும் ஒரு பாகத்தில் வாக்காளர் படிவம் கொடுக்க 8 நாட்கள் போதும். எனவே இதில் காலதாமதம் ஏற்பட வாய்ப்பே இல்லை. எஸ்.ஐ.ஆர் குறித்து தவறான செய்தி பரவி வருகிறது. தகுதியான வாக்காளர்கள் பட்டியலில் இடம்பெற வேண்டும் என்பதே எஸ்.ஐ.ஆரின் நோக்கம். இறந்தவர்கள், வீடு மாறி சென்றவர்களை நீக்கக்கூடாது என திமுகவினர் சொல்கின்றனர். ஏனெனில் தகுதியானவர்கள் மட்டும் இடம் பெற்றால் கள்ள ஓட்டு போடமுடியாது என திமுகவினர் இதனை எதிர்க்கிறார்கள்.

எஸ்ஐஆரை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் திமுக வழக்கு தொடர்ந்துள்ளது. விசாரணையின்போது நீதிமன்றத்தில் திமுக தவறான தகவலை பதிவு செய்தால் அதை செய்யவே வழக்கில் அதிமுகவும் இணைந்துள்ளது. நீதிமன்றத்தில் தவறான தகவலை தெரிவிக்காமல் இருக்க திமுகவுக்கு ‘செக்’வைக்கவே நாங்களும் வழக்கில் இணைந்துள்ளோம். திமுக தவறான தகவல்களை சொன்னால், எங்கள் தரப்பில் சரியான தகவல்களை நீதிமன்றத்தில் தெரிவிப்போம்.

சென்னையில் கள்ள ஓட்டு போட முயன்ற திமுக நிர்வாகியை முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் பிடித்துக்கொடுத்தார். வாக்காளர் பட்டியல் திருத்தத்தில் தவறு இருந்தால் சுட்டிக்காட்டுங்கள். தகுதியானவர்கள் வாக்காளர் பட்டியலில் இடம்பெற வேண்டும் என்பதற்காகவே நாங்கள் எஸ்ஜஆரை ஆதரிக்கிறோம்.

என் குடும்பத்தினர் யாரும் அரசியலில் தலையிடுவது இல்லை. என் மகனையோ, மருமகனையோ அதிமுக ஆட்சியின்போதோ அல்லது கட்சியிலோ யாராவது பார்த்திருக்கிறீர்களா? இதற்கு முன் கட்சியிலிருந்து விலகியவர்கள் குடும்ப அரசியல் குற்றச்சாட்டை என் மீது கூறினார்களா? என் மீது வேறு குற்றச்சாட்டுகள் கூற முடியாததால் குடும்ப அரசியல் என்று செங்கோட்டையன் கூறுகிறார். தமிழகத்தில் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு அதிமுகதான் தலைமை ஏற்கும் என்று அமித்ஷா ஏற்கெனவே தெளிவுபடுத்திவிட்டார். முதல்வர் வேட்பாளர் இபிஎஸ் என்றும் பாஜக கூறிவிட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

# ரஷ்யாவுக்கு வருகை தந்த இந்திய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 40% அதிகரிப்பு



மாஸ்கோ, நவ.12-
நடப்பு 2025ம் ஆண்டின் முதல் 6 மாத காலத்தில் ரஷ்யாவின் மாஸ்கோ நகருக்கு சுற்றுலா சென்ற இந்தியப் பயணிகளின் எண்ணிக்கை 40 சதவீதம் அதிகரித்துள்ளது.

அதன்படி, 2025 முதல் அரையாண்டில் 40,800 பயணிகள் இந்தியாவிலிருந்து மாஸ்கோவுக்கு சுற்றுலா சென்றுள்ளனர். காமன்வெல்த் அமைப்பை (சிஜஎஸ்) சாராத நாடுகளின் பயணிகள் மாஸ்கோவுக்கு சுற்றுலா செல்வதில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.

2025 ஜனவரி முதல் ஜூன் வரையிலான காலகட்டத்தில் ஒட்டுமொத்தமாக சிஜஎஸ் நாடுகளுக்கு வெளியில் இருந்து 5 லட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் மாஸ்கோவுக்கு வருகை தந்துள்ளனர். இது, கடந்த 2024ம் ஆண்டை காட்டிலும் 10% அதிகம்.

ஆசிய நாடுகளில் இருந்து மாஸ்கோவுக்கு செல்லும் ஆர்வம் பலரிடம் அதிகரித்துள்ளது. அதன் விளைவாக, சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது.

மாஸ்கோ உலகளவில் அனைவரையும் ஈர்க்கும் சுற்றுலாத்தலமாக விரிவடைந்து வருகிறது என்று மாஸ்கோ நகர சுற்றுலா குழு தெரிவித்துள்ளது. இவிசா வசதி மற்றும் அங்கு நடைபெறும் கலாச்சார கொண்டாட்டங்கள் ஆகியவை உலகெங்கிலும் இருந்து சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்த்து வருவதாக தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## சபரிமலை மண்டல பூஜை: காட்பாடி, ஜோலார்பேட்டை வழியாக சிறப்பு ரயில்கள்

சென்னை, நவ.12-
சபரிமலை ஐயப்பன் கோயிலில் மண்டல பூஜை மற்றும் மகரவிளக்கு பூஜைக்கு சென்று திரும்பும் பக்தர்கள் வசதிக்காக, காக்கிநாடா கோட்டயம் சிறப்பு ரயில் உள்பட 3 சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளன. இதன்படி, காக்கிநாடா டவுனில் இருந்து நவ.17, டிச.1, 8, 15, 22, 29, ஜன.5, 12, 19 ஆகிய தேதிகளில் வாராந்திர சிறப்பு ரயில் (07109) இயக்கப்படும்.

மறுமார்க்கமாக, கோட்டயத்தில் இருந்து நவ.18, டிச.2, 9, 16, 23, 30, ஜன.6, 13, 20 ஆகிய தேதிகளில் வாராந்திர சிறப்பு ரயில் (07110) இயக்கப்படும். இந்த ரயில்கள் காட்பாடி, ஜோலார்பேட்டை, சேலம், ஈரோடு, திருப்பூர், போத்தனூர் வழியாக இயக்கப்படும். மகாராஷ்டிரா ஹசூர் சாஹிப் நாந்தேட் கொல்லம் இடையே ஒரு சிறப்பு ரயிலும், தெலுங்கானா சார்லபள்ளி கொல்லம் இடையே ஒரு சிறப்பு ரயிலும் இயக்கப்பட உள்ளன.

சிறப்பு ரயில்களுக்கான டிக்கெட் முன்பதிவு இன்று (10ம் தேதி) காலை 8 மணிக்கு தொடங்குகிறது. இத்தகவல், தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



■ மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் முனியாண்டி சுவாமி வகையறா திருக்கோயிலில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் அறிவித்தபடி இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் மூத்த தம்பதியர்களுக்கு சிறப்பு செய்யும் நிகழ்வு நடந்தது. இதில் ஐந்து இணைகளுக்கு சிறப்பு செய்யப்பட்டது இதில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், அறங்காவலர் குழு தலைவர் அமுல் ராணி ரகுபதி, கோவில் செயல் அலுவலர் சூரியன், சரக ஆய்வாளர் சாவித்திரி மற்றும் உறுப்பினர்கள் மாரி, கணேசன், பெரியசாமி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# இந்திய தேர்தல் ஆணையத்தின் எஸ்.ஐ.ஆர். சிறப்பு வாக்காளர் திருத்த பணிகளுக்கு கொட்டு வைக்கும் விதமாக தமிழகம் முழுவதும் கண்டன ஆர்பாட்டம் நடைபெறுகிறது

**நடிகர் வடிவேல் பாணியில் நானும் ரவுடிதான் என சினிமா படத்தில் சொல்வது போல் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அரசியல் செய்கிறார் ஐ.பி.செந்தில்குமார் கடும் தாக்கு**

சின்னாளபட்டி, நவ.12-
இந்திய தேர்தல் ஆணையத்தின் எஸ்.ஐ.ஆர். சிறப்பு வாக்காளர் திருத்த பணிகளுக்கு கொட்டு வைக்கும் விதமாகத்தான் தமிழகம் முழுவதும் கண்டன ஆர்பாட்டம் நடைபெறுகிறது என்றும் திரைப்பட நடிகர் வடிவேல் படத்தில் சொல்வது போல் நானும் ரவுடிதான் என்ற பாணியில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தமிழகத்தில் அரசியல் செய்கிறார் என்று என்று திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் கண்டன ஆர்பாட்டத்தில் பேசினார்.

இந்திய தேர்தல் ஆணையம் தமிழகத்தில் நடைபெற உள்ள 2026ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலுக்கு முன்னோட்டமாக சிறப்பு வாக்காளர் திருத்த பணிகளை மேற்கொண்டு வருகிறது. சட்டமன்ற தேர்தலுக்கு 2மாத காலஅவகாசம் இருக்கும் நிலையில் அவசர அவசரமாக எஸ்.ஐ.ஆர். சிறப்பு வாக்காளர் திருத்த பணிகளை மேற்கொள்வதற்கு, தமிழகம் முழுவதும் பலத்த எதிர்ப்பு கிளம்பி வருகிறது. குறிப்பாக மதசார்பற்ற முற்போக்கு கூட்டனி சார்பாக திமுக மற்றும் கூட்டனி கட்சிகள் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளன. இந்நிலையில் தமிழகம் முழுவதும் திமுக தலைமையிலான கூட்டனி கட்சிகள் சார்பாக மாவட்ட தலைநகரங்களில் கண்டன ஆர்பாட்டம் நடைபெற்றது. திண்டுக்கல் மணிக்கூண்டு அருகே நடைபெற்ற கண்டன ஆர்பாட்டத்திற்கு திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி.செந்தில்குமார் தலைமை தாங்கினார். திண்டுக்கல் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம், வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன், மதிமுக மாவட்ட செயலாளர் செல்வராகவன், காங்கிரஸ் கட்சி மாவட்ட தலைவர் மணிகண்டன், விடுதலை சிறுத்தைகள் கட்சியை சேர்ந்த மைதீன்பாவா, கண்டன ஆர்பாட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் அவர்கள் பேசும் போது எஸ்.ஐ.ஆர்.ஐ கண்டு பயப்படும் இயக்கம் திமுக அல்ல, சட்டமன்ற தேர்தலுக்கு இரண்டுமாத கால அவகாசம் இருக்கும்போது, அவசர அவசரமாக தேர்தல் ஆணையம் தமிழகத்தில் சிறப்பு வாக்காளர் திருத்த பணிகளை மேற்கொள்வதன் காரணம் என்ன? என கேள்வி எழுப்பினார். பீகார் மாநிலத்தில் 6.5லட்சம் வாக்காளர்களை நீக்கிவிட்டார்கள் என்று கூறுகிறார்கள். அந்த வாக்காளர்களை



தமிழகத்தில் இணைக்கவா தேர்தல் ஆணையம் திட்டமிடுகிறது என்றார். தேர்தல் ஆணையாளரை நியமிப்பதில் மத்திய அரசு விதிமுறைகளை பின்பற்றவில்லை. இதுதவிர அவசர கெதியில் முறையான அலுவலர்களை கொண்டு விண்ணப்ப படிவம் வழங்காமல் ஊராட்சி பம்ப் ஆப்ரேட்டர் சத்துணவு மையங்களில் வேலை செய்யும் பெண்கள் கிராம நிர்வாக அலுவலரின் உதவியாளரை (தலையாரி) கொண்டு விண்ணப்பங்கள் வழங்கி வருகிறது இது முறைகேடான செயலாகும் என்றதோடு இந்தியாவில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் பொதுவானதாக இருக்க வேண்டிய இந்திய தேர்தல் ஆணையம் பாஜகவின் கைப்பாவையாக செயல்படுகிறது. முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் வந்த திராவிடமாடல் ஆட்சி நாயகன் கழகத்தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இந்திய தேர்தல் ஆணையத்தை எதிர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார்கள். விரைவில் நமக்கு வெற்றி கிடைக்கும் என்றார். தமிழக மக்களை அவர்களின் வாழ்வாதாரத்தை காப்பாற்ற திமுக நினைத்து வழக்கு தொடர்ந்துள்ளது. ஆனால் தமிழகத்தை ஆண்ட கட்சியான அதிமுக எஸ்.ஐ.ஆர்ஜ எதிர்க்கவில்லை முறையாக நடக்க வேண்டும் என்கிறது. இது எப்படி இருக்கிறது என்றால் வடிவேல் ஒரு படத்தில் சொல்வாரே நானும் ரவுடிதான், நானும் ரவுடிதான் என்று சொல்வது போல் உள்ளது என்றார். உச்சநீதிமன்றம் இன்று நடைபெற்ற கண்டன ஆர்பாட்டத்தை பார்த்து நியாயமான தீர்;ப்பை வழங்கும் அது நமக்கு மாபெரும் வெற்றியாக இருக்கும் என்றார். கண்டன ஆர்பாட்டத்தில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆத்தூர் நடராஜன், தண்டபானி, கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, மாவட்ட துணைச்செயலாளர்கள் ஆ.நாகராஜன், பிலால் உசேன், மார்க்கிரேட் மேரி, மாவட்ட பொருளாளர் சத்தியமூர்த்தி, முன்னால் எம்.எல்.ஏ.ஆண்டிஅம்பலம், திண்டுக்கல் மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் ராஜப்பா, ஒன்றிய செயலாளர்கள் ப.க.சிவகுருசாமி, பிள்ளையார்நத்தம் முருகேசன், மணி, சௌந்தரபாண்டியன், மணிகண்டன், பாறைப்பட்டி ராமன், சீவல்சரகு ராஜேந்திரன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், பகுதி செயலாளர்கள் வழக்கறிஞர் சூசைராபர்ட், பஜலுல்ஹக், ராஜேந்திரகுமார் ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் கே.புதுக்கோட்டை ரமேஷ், முத்துகிருஷ்ணன், காங்கேயன், முன்னால் ஒன்றியகுழு உறுப்பினர்கள் காணிக்கைசாமி, வசந்தகுமார், சுமதி கணேசன், மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகள், திமுக இளைஞர் அணியினர், மகளிர் அணியினர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.




# திருச்சியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணியின் போது திமுக அதிமுக மோதல்

**கோட்டை காவல் நிலையம் முற்றுகை அதிமுக வினர் நூற்றுக்கணக்கானோர் திரண்டதால் பரபரப்பு**

திருச்சி, நவ.12-
வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த பணியின் போது திருச்சியில் திமுக, அதிமுகவினர் இடையே மோதல் ஏற்பட்டது. இதில் அதிமுக நிர்வாகியை போலீசார் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றதால்,

, ஆத்திரமடைந்த அதிமுகவினர் கோட்டை காவல் நிலையத்தை முற்றுகையிட்டனர். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

திருச்சி மாநகராட்சிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணி நடந்து வருகிறது. அந்த வகையில் மாநகராட்சி 21 வது வார்டுக்கு உட்பட்ட நத்தர்ஷா பள்ளி வாசல் அருகே வாக்காளர்களுக்கு எஸ்.ஐ.ஆர் படிவங்கள் வழங்கப்பட்டன அப்போது வாக்குச்சாவடி அலுவலரின் அருகாமையில் திமுக நிர்வாகி ஒருவர் அமர்ந்திருந்ததாக கூறப்படுகிறது.

இதைப் பார்த்த அதிமுக பாசறை முன்னாள் மாவட்ட செயலாளர் இலியாஸ் இங்கே கட்சிக்காரர்களுக்கு என்ன பணி என கேட்டார். இதற்கு திமுகவினர் எதிர்ப்பு தெரிவித்தனர். அப்போது திமுக, அதிமுகவினர் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது. அதைத்தொடர்ந்து இலியாஸ் காவல்துறையின் 100க்கு போன் செய்து தகவல் தெரிவித்தார் தகவல் அறிந்த போலீசார் சம்பவ இடம் விரைந்து விசாரணை நடத்தினர். பின்னர் அனைவரும் அங்கிருந்து கலைந்து சென்றனர். இந்த நிலையில் திடீரென திமுகவினர் கொடுத்த புகாரின் அடிப்படையில் அதிமுக பிரமுகர் இலியாஸ் கோட்டை போலீஸாரால் காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். இது பற்றி தகவல் அறிந்த அதிமுகவினர் மாநகராட்சி கவுன்சிலரும் ,ஜெயலலிதா பேரவை மாநில துணை செயலாளருமான அரவிந்தன் தலைமையில் நூற்றுக்கும் மேற்பட்டோர் விரைந்து சென்று கோட்டை காவல் நிலையத்தை முற்றுகையிட்டனர்.

இதில் எம்ஜிஆர் மன்ற மாவட்ட துணை செயலாளர் அப்பாக்குட்டி, பேரவை ஒத்தக்கடை மகேந்திரன், மணிகண்டன், வட்டச் செயலாளர்கள் ஜெயக்குமார் ராஜ்மோகன், கதிர்வேல்,முன்னாள் கவுன்சிலர் நத்தர்ஷா உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோர் திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டது. பின்னர் போலீசார் அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். பின்னர் பேச்சுவார்த்தையில் சமூக உடன்பாடு எட்டப்பட்டது. இதை அடுத்து அதிமுக நிர்வாகி எலியாசை போலீசார் விடுவித்தனர். பின்னர் அனைவரும் கரைந்து சென்றனர். இந்த சம்பவத்தால அங்கு சிறிது நேரம் பரபரப்புடன் காணப்பட்டது.




# திருச்சி தென்னூரில் காலி பணியிடங்களை உடனடியாக நிரப்ப வலியுறுத்தி தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழு வாயிற்கூட்டம்

திருச்சி, நவ.12-

தமிழ்நாடு மின்வாரியத்தில் 60,000 காலிப்பணியிடங்களை முறையாக நிரப்பாமல், ஒப்பந்ததாரரின் மூலம் வேலைக்கு ஆள் எடுக்கும் வழிகாட்டி நெறிகளை கைவிட வேண்டும். ஊதிய உயர்வு ஒப்பந்த காலம் முடிந்த 23 மாதங்கள் கடந்த பிறகும் ஊதிய உயர்வு கிடைக்குமா? இல்லையா? என்ற நிலைக்கு தீர்வு காண வேண்டும்.


ஊதிய உயர்வை உடனே வழங்க வேண்டும்.

கிளாஸ் மி, மிமி உட்பட அனைவருக்கும் பிரித்தாளும் முறையை கைவிட்டு ஒன்றாக வழங்க வேண்டும்.

மின் விநியோகத்தை தனியாரிடம் ஒப்படைக்க நிர்பந்தப்படுத்துவதை மத்திய அரசு கைவிட வேண்டும்.

மாநில அரசின் கீழ் மின் வாரியங்களை செயல்படுத்த நிதி உதவி செய்ய வேண்டும் என்பன உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தென்னூரில் உள்ள மின்வாரிய தலைமை பொறியாளர் அலுவலகம் முன் தமிழ்நாடு மின் வாரிய தொழிற்சங்க கூட்டு நடவடிக்கை குழு சார்பில் வாயிற் கூட்டம் நடந்தது. சி.ஐ.டி.யு மாநிலத் துணைத் தலைவர் ரங்கராஜன் தலைமை தாங்கினார்.இன்ஜினியர் சங்க மண்டல செயலாளர் நரசிம்மன்,எம்ப்ளாயீஸ் ஃபெடரேசன் சிவசெல்வம், தொழிலாளர் பொறியாளர் ஐக்கிய சங்கம் சதீஷ், தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு பழனியாண்டி,தமிழ்நாடு மின்வாரியம்

இருதயராஜ் உள்பட ஏராளமானவர் கலந்து கொண்டனர். முடிவில் செந்தில் நன்றி கூறினார்.



■ மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் முனியாண்டி சுவாமி வகையறா திருக்கோயிலில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் அறிவித்தபடி இந்து சமய அறநிலையத்துறையின் சார்பில் மூத்த தம்பதியர்களுக்கு சிறப்பு செய்யும் நிகழ்வு நடந்தது. இதில் ஐந்து இணைகளுக்கு சிறப்பு செய்யப்பட்டது இதில் சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன், அறங்காவலர் குழு தலைவர் அமுல் ராணி ரகுபதி, கோவில் செயல் அலுவலர் சூரியன், சரக ஆய்வாளர் சாவித்திரி மற்றும் உறுப்பினர்கள் மாரி, கணேசன், பெரியசாமி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




■ பழைய அரசு மருத்துவமனைகளில் ஆட்குறைப்பு செய்து, புதிய மருத்துவமனைகளில் மருத்துவர்கள் நியமிப்பதை எதிர்த்து, திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் டாக்டர்கள் ஆர்ப்பாட்டம்.

# மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையை மத்திய அரசு விரைந்து கட்டித்தர வேண்டும்: அமைச்சர் மா.சுப்பிரமணியன்

மதுரை, நவ.12-

ராமநாதபுரத்தில் படிக்கும் எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரி மாணவர்கள் இன்னும் ஓராண்டில் எய்ம்ஸ் மருத்துவ மனையை பார்க்காமலே டிகிரி வாங்கி சென்றுவிடுவர். அதற்குள்ளாவது மத்திய அரசு எய்ம்ஸ் மருத்துவமனையை விரைந்து கட்டித்தர வேண்டும் என மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வலியுறுத்தினார்.



மதுரை ராஜாஜி மருத்துவமனையில் ரூ.50 லட்சத்திலான நவீன டெக்சாஸ் ஸ்கேன் மையத்தை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார். அப்போது அமைச்சர்கள் பி.மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன் ஆகியோர் பங்கேற்றனர். பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறியது: ”கடந்த 2018ல் டிசம்பர் 17ம் தேதி 7 மாநிலங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க மத்திய அரசு அறிவித்தது. அதன்படி பஞ்சாப், பிஹார், ஜம்மு, காஷ்மீர் உள்ளிட்ட 6 மாநிலங்களில் கட்டி முடித்துவிட்டனர். தமிழகம் நீங்கலாக 6 மாநிலங்களுக்கும் மத்திய அரசு நிதி வழங்கியது.

தமிழகத்துக்கு மட்டும் ஜப்பான் ஜெய்க்கா நிதி நிறுவனத்தின் 85 சதவீத நிதி உதவியும், 15 சதவீதம் மத்திய அரசும் நிதி ஒதுக்கியது. 2019 ஜனவரி 27ல் பிரதமர், அப்போதைய முதல்வர் பழனிசாமி, எம்.பி தேர்தலை மனதில் வைத்து அடிக்கல் நாட்டினர். 2021ம் ஆண்டு மே 7ம் தேதி வரை எதுவுமே செய்யவில்லை. திமுக அரசு பொறுப்பேற்ற பின்பு எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கான 222 ஏக்கர் நிலத்தை ஆதாரபூர்வமாக வழங்கியது. தொடர்ந்து தமிழக முதல்வர், பிரதமரை சந்தித்து வலியுறுத்தினார். இதற்கிடையில் 2022ம் ஆண்டு எய்ம்ஸ் மருத்துவக் கல்லூரிக்கு 50 மாணவர்கள் சேர்ந்தனர்.

தமிழக முதல்வர் மறுத்திருந்தால் எய்ம்ஸ் வராமல் போயிருக்கும். எனவே ராமநாதபுரம் மருத்துவக் கல்லூரியில் அந்த மாணவர்கள் படிக்க தமிழக முதல்வர் அனுமதி வழங்கினார். தற்போது வரை 4 ஆண்டுகளில் 200 எய்ம்ஸ் மாணவர்கள் படிக்கின்றனர். ஆனால், இன்னும் எய்ம்ஸ் கட்டி முடிக்கவில்லை. இன்னும் ஓராண்டு முடிந்தால் எய்ம்ஸ் மாணவர்கள் கல்லூரியை பார்க்காமலே டிகிரி வாங்கி சென்றுவிடுவர்.

அம்மாணவர்கள் கல்லூரியை பார்த்துவிட்டு செல்லும் வகையில் கட்டி முடிக்க வேண்டும். அதில் நமக்கும் பொறுப்பு இருக்கிறது என தமிழக முதல்வர், எங்களை 2023ல் பிப்.6, 7ம் தேதி ஜப்பான் போகச் சொன்னார். தமிழகத்தில் இருந்து நானும் ஒரு குழுவோடு சேர்ந்து டோக்கியோவில் உள்ள ஜெய்க்கா நிறுவன துணைத் தலைவரை சந்தித்து கடிதம் கொடுத்தோம்.

ஜெய்க்காவின் டெல்லி பிரதிநிதியான ஆதித்யாபூரி என்ற சகோதரியை அழைத்துச் சென்றோம். அங்கு கொடுத்த பின்புதான் மருத்துவக் கல்லூரி மருத்துமனையை கட்டத் தொடங்கியுள்ளனர். அதுவே எங்களுக்கு மகிழ்ச்சி. அதனை விரைந்த கட்டித்தர மத்திய அரசுக்கு எல்லா வகையில் உறுதுணையாக இருந்து வருகிறோம். மேலும், அங்கு 33 கிலோ வாட் மின்சார உபயோகத்திற்கு ரூ.13 கோடி 13 லட்சத்து 71 ஆயிரத்து 148ம், குடிநீர் கட்டமைப்புக்கு ரூ.11 கோடி 66 லட்சமும் தமிழக அரசு வழங்கியுள்ளது. மத்திய அரசோடு இணைந்தே மாநில அரசு செயல்படுகிறது. எய்ம்ஸ் விரைந்து கட்டி முடித்து மக்களின் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும்” என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.

இந்தச் செய்தியாளர் சந்திப்பில், மதுரை தெற்கு எம்.எல்.ஏ திரமு. பூமிநாதன், மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி இயக்கம் இயக்குநர் சுகந்தி ராஜ குமாரி, மு.பூமிநாதன் எம்எல்ஏ, மருத்துவக் கல்லூரி டீன் அருள் சுந்தரேஷ் குமார், மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் ஆகியோர் உடனிருந்தனர்.



# நெய்யாறு அணை வழக்கு: கேரள அரசு பதிலளிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, நவ.12-

நெய்யாறு அணையிலிருந்து உரிய நீரை திறக்க கோரி தமிழ்நாடு அரசு தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா அமர்வு நேற்று விசாரித்தது. கேரள அரசின் சார்பில் மூத்த வழக்கறிஞர் ஜெய்தீப் குப்தா ஆஜராகி பதில் மனு தாக்கல் செய்ய 2 அல்லது 3 வாரம் அவகாசம் கோரினார்.

தமிழ்நாடு அரசின் கூடுதல் தலைமை வழக்கறிஞர் வி. கிருஷ்ணமூர்த்தி, கேரள அரசு பதில் மனு தாக்கல் செய்யட்டும், அதற்கு விளக்கம் அளிக்கும் மனுவை 2 வாரத்துக்குள் தாக்கல் செய்வோம் என்றார்.

இரு தரப்பு வாதங்களை பதிவு செய்து கொண்ட உச்ச நீதிமன்றம், தமிழக அரசின் மனுவுக்கு 2 வாரங்களுக்குள் பதில் அளிக்கவும், பதில் மனுவுக்கு விளக்கம் அளிக்கும் மனுவை தமிழக அரசு தாக்கல் செய்யவும் உத்தரவிட்டு விசாரணையை 2 வாரங்களுக்கு ஒத்திவைத்தனர்.



■ மாநிலம் தழுவிய முற்றுகை போராட்டம் தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்பு உரிமைகளுக்கான சங்கம் திண்டுக்கல் மாவட்ட குழு சார்பில் பல்வேறு அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது



■ திருப்பூர் மாவட்டம், திருப்பூர் தெற்கு வட்டம், வித்யாலயம் பகுதியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளான வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களின் இல்லத்திற்கு சென்று கணக்கெடுப்பு படிவம் வழங்கும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் திருப்பூர் தெற்கு வட்டாட்சியர் திரு.செ.சரவணன் அவர்கள் உள்ளார்.

# திருச்சியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை உடனடியாக நிறுத்த வலியுறுத்தி திமுக கூட்டணி கட்சிகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்: 3 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் திரண்டதால் பரபரப்பு

திருச்சி, நவ.12-

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை தேர்தல் ஆணையம் செயல்படுத்தி வருகிறது. கடந்த 4 ந்தேதி முதல் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. குறிப்பாக பீகாரில் நடைபெற்ற சிறப்பு வாக்காளர் திருத்தத்தில் 60 லட்சத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர்.இதே நிலை தமிழகத்தில் வரும் அபாயம் உள்ளது. எனவே எஸ்.ஐ.ஆரை ஒரு மாத கால அவகாசத்தில் மேற்கொள்ளக் கூடாது. தேர்தல் முடிந்த பின்பு கால அவகாசம் கொடுத்து, அதனை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர். இது தொடர்பாக திமுக உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ள நிலையில் திமுக தலைமையிலான திமுக கூட்டணி கட்சிகள் சார்பில் தமிழ்நாடு முழுவதும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் எனஅறிவிக்கப்பட்டது.

அதன்படி திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே மத்திய, வடக்கு, தெற்கு மாவட்ட திமுக கூட்டணி கட்சிகள் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டம் மத்திய மாவட்ட செயலாளர் க.வைரமணி தலைமையில், வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி ந.தியாகராஜன் எம்.எல்.ஏ,மாநகர செயலாளர்கள் மேயர் மு.அன்பழகன்,மண்டல குழு தலைவர் மு.மதிவாணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசிய தலைவர் காதர் மொய்தீன், திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ, முன்னாள் அமைச்சர் சுரேஷ் ராஜன் உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத்தில் கண்டன உரையாற்றினர்.

மத்திய பாஜக அரசின் கைப்பா வையாக தேர்தல் ஆணையம் செயல்படுவதாக குற்றம் சாட்டியும், எஸ்.ஐ.ஆர் ஐ உடனடியாக நிறுத்த வேண்டும் என வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டத்தில் கண்டன கோசங்கள் எழுப்பப்பட்டது.

இதில் சட்டமன்ற உறுப்பினர்கள் சௌந்தர பாண்டியன் ஸ்டாலின் குமார், எம்.பழனியாண்டி, அப்துல் சமது, முன்னாள் எம்.எல்.ஏ அன்பில் பெரியசாமி, திருச்சி மாவட்ட காங்கிரஸ் தலைவர்கள் எல். ரெக்ஸ்,திருச்சி கலை, வக்கீல் கோவிந்தராஜன், மாநிலச் செயலாளர் வக்கீல் சரவணன், முன்னாள் மாவட்ட தலைவர் ஜெரோம் ஆரோக்கியராஜ்,மாவட்ட பொருளாளர் முரளி, கோட்டத் தலைவர்கள் ராஜா டேனியல் ராய், பிரியங்கா பட்டேல்,சம்சுதீன்,ஜெயம் கோபி, தர்மேஷ் ஓ.பி சி. பிரிவு மாநில செயலாளர் பூக்கடை பன்னீர்செல்வம்,மனித உரிமைத் துறை எஸ்.ஆர். ஆறுமுகம், ஐ.டி பிரிவு லோகேஷ், அரிசி கடை டேவிட், எல்.ஐ.சி ஜெயராமன், உய்ய கொண்டான் திருமலை பாஸ்கர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாநில கட்டுப்பாட்டு குழு தலைவர் ஸ்ரீதர்,மாநகர் மாவட்ட செயலாளர் வெற்றிச்செல்வன்,

புறநகர் மாவட்ட செயலாளர் சிவராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் மாவட்டச் செயலாளர் சிவா,திருச்சி மாநகராட்சி கவுன்சிலர் சுரேஷ், விடுதலை சிறுத்தைகள் கட்சி சார்பில் மாநிலத் துணைச் செயலாளர் மாநகராட்சி கவுன்சிலர் பிரபாகரன், மாவட்ட செயலாளர்கள் புல்லட் லாரன்ஸ், கனியமுதன், கலைச் செல்வன்,ஆற்றல் அரசு, மண்டல செயலாளர் தமிழாதன், அகில இந்திய மக்கள் மறுமலர்ச்சி கழகம் சார்பில் நிறுவன தலைவர் வழக்கறிஞர் பொன். முருகேசன், ம.தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் வெல்ல மண்டி சோமு, பகுதி செயலாளர்கள் ஜங்ஷன் செல்லத்துரை, ஆசிரியர் முருகன்,கவுன்சிலர் அப்பீஸ் முத்துக்குமார், ,மனிதநேய மக்கள் கட்சி மேற்கு மாவட்ட தலைவர் கவுன்சிலர் பைஸ் அகமது,கிழக்கு மாவட்ட தலைவர் முஹம்மது ராஜா, மாவட்ட செயலாளர் இப்ராகிம்சா, மனிதநேய ஜனநாயக கட்சி மாநில இளைஞரணி செயலாளர் முகமது ஷெரீப்,மாவட்டத் துணைச் செயலாளர் தர்வேஷ் பாஷா, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட தலைவர் ஹபீபுர் ரகுமான்,மாவட்ட இளைஞரணி செயலாளர் பேராசிரியர். மைதீன்,அகில இந்திய பார்வர்டு பிளாக் மாவட்ட, மாநில செயலாளர் வெங்கடேசன்,திராவிடர் கழக மாவட்ட தலைவர் ஆரோக்கியராஜ் ,ஆதித்தமிழர் பேரவை செங்கை குயிலி,மக்கள் நீதி மையம் மேற்கு மாவட்ட செயலாளர் சதீஷ்குமார், மாநகர செயலாளர் சீனிவாசன், எஸ்.டி. பி.ஐ கட்சி ஹஸ்ஸான் இமாம் ,தமீம் அன்சாரி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி ராயல் ராஜா,வக்கீல் பிரபு, திராவிடர் கழகம் ஆரோக்கியராஜ் சேகர், கொங்கு மக்கள் தேசிய கட்சி தேவராஜ், சேகர், மற்றும் மத்திய வடக்கு மாவட்ட திமுக சார்பில், அவைத் தலைவர்கள் பேரூர் தர்மலிங்கம், அம்பிகாபதி,மாவட்ட துணைச் செயலாளர் முத்து செல்வம்,மத்திய மாவட்டம் முன்னாள் துணை செயலாளர் குடமுருட்டி சேகர்,ஒன்றிய செயலாளர்கள் மாத்தூர் கருப்பையா, அந்த நல்லூர் கதிர்வேல்,பகுதி செயலாளர்கள் மோகன்தாஸ் கமால் முஸ்தபா ,நாகராஜன் காஜாமலை விஜய், ராம்குமார், மாநகர அயலக அணி அமைப்பாளர் துபேல் அகமது, மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் கிராப்பட்டி செல்வம் ,புத்தூர் தர்மராஜ்,வர்த்தகர் அணி அமைப்பாளர் பி.ஆர். சிங்காரம், மீனவர் அணி மாவட்ட அமைப்பாளர் முள்ளிப்பட்டி பால்ராஜ், வர்த்தகர் அணி தொழிலதிபர் ஜான்சன் குமார், திருச்சி மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் விஜயலட்சுமி கண்ணன், துர்கா தேவி,முன்னாள் பகுதி செயலாளர் தில்லைநகர் கண்ணன், மாநகரத் துணைச் செயலாளர் கவுன்சிலர் கலைச்செல்வி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் மதனா, மகளிர் அணிஅமைப்பாளர் கவிதா, மாவட்ட பிரதிநிதிகள் வக்கீல் மணி வண்ண பாரதி, சோழன் சம்பத்,வட்டச் செயலாளர்கள் புத்தூர் பவுல்ராஜ் , வாமடம் சுரேஷ், மார்சிங் பேட்டை செல்வராஜ், தனசேகர்,பி ஆர் பி பாலசுப்ரமணியன், மூவேந்திரன் கவுன்சிலர்கள் புஷ்பராஜ், ராமதாஸ், மஞ்சுளா பாலசுப்பிரமணியன், முன்னாள் பஞ்சாயத்து தலைவர் புங்கனூர் தாமோதரன், நிர்வாகிகள் பிராட்டியூர் மணிவேல், இன்ஜினியர் நித்தியானந்தம், அரவானூர் தர்மராஜன், சர்ச்சில், கிங், தெற்கு மாவட்ட திமுக தெற்கு மாவட்ட திமுக சார்பில் முன்னாள் எம்.எல்.ஏ கே.என்.சேகரன்,சபியுல்லா, வண்ணை அரங்கநாதன், மாவட்ட துணைச் செயலாளர்கள் செங்குட்டுவன், மூக்கன், லீலா வேலு,பகுதிச் செயலாளர்கள் கொட்டப்பட்டு இ எம் தர்மராஜ் ஏ.எம்.ஜி. விஜயகுமார், பாபு, மோகன், மணிவேல், சிவக்குமார், நீலமேகம், ராஜ் முகம்மது, கவுன்சிலர்கள் கே.கே.கே. கார்த்திக், சாதிக் பாட்ஷா, எல்.ஐ.சி சங்கர் உள்பட திமுக கூட்டணி கட்சி நிர்வாகிகள் மூவாயிரத்துக்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டனர்.





# டெல்லியில் மோசமடைந்த காற்று மாசுபாடு: 24 மணி நேரத்தில் 6 மாநிலங்களில் பயிர்க் கழிவுகள் எரிப்பு 60% அதிகரிப்பு



புதுடெல்லி, நவ.12-

டெல்லியில் காற்று மாசுபாடு மோசம் அடைந்துள்ள நிலையில் 6 அண்டை மாநிலங்களில் பயிர்க் கழிவு எரிப்பு சம்பவங்கள் 24 மணி நேரத்தில் 60% அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

டெல்லி தேசிய தலைநகரப் பிராந்தியத்தில் காற்று மாசுபாடு அதிகரிப்பதற்கு, பஞ்சாப், ஹரியானா உள்ளிட்ட அண்டை மாநிலங்களில் பயிர்க் கழிவுகள் எரிக்கப்படுவதும் ஒரு காரணமாக உள்ளது.

இந்நிலையில் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தின் கிரீம்ஸ் (சிஸிணிகிவிஷி) ஆய்வகம் சேகரித்த தரவுகளின்படி, நவம்பர் 8ம் தேதி வெறும் 24 மணி நேரத்தில், 6 மாநிலங்களில் பயிர்க் கழிவு எரிப்பு சம்பவங்கள் 60 சதவீதம் அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

செயற்கைக்கோள் ரிமோட் சென்சிங் தரவுகளின்படி, பஞ்சாப், ஹரியானா, உ.பி., டெல்லி, ராஜஸ்தான், ம.பி. ஆகிய 6 மாநிலங்களில் நவம்பர் 7ம் தேதி 568ஆக இருந்த பயிர்க்கழிவு எரிப்பு சம்பவங்கள் மறுநாள் 911ஆக அதிகரித்துள்ளது.

நவம்பர் 8ம் தேதி, ம.பி.யில் 353 இடங்களில் பயிர்க் கழிவுகள் எரிக்கப்பட்டுள்ளன. இதையடுத்து பஞ்சாபில் 238, ஹரியானாவில் 158, ராஜஸ்தானில் 120, உ.பி.யில் 42 என இந்த சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இந்தப் பருவத்தில் செப்டம்பர் 15 முதல் நவம்பர் 8 வரை மேற்கண்ட 6 மாநிலங்களில் மொத்தம் 8,365 பயிர்க் கழிவுகள் எரிப்பு சம்பவங்கள் கண்டறியப்பட்டுள்ளன, இதில் பஞ்சாபில் அதிகபட்சமாக 3,622 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

பஞ்சாபில் பயிர்க் கழிவுகள் எரிக்கப்படுவதை அங்குள்ள ஆம் ஆத்மி அரசு கட்டுப்படுத்த தவறுவதாக டெல்லி பாஜக அரசு குற்றம் சாட்டுகிறது. பயிர்க் கழிவுகள் எரிக்கப்படுவதை தடுக்க சில விவசாயிகளை பிடித்து சிறையில் அடைக்கலாம் என்றும் ஒருமுறை உச்ச நீதிமன்றம் பரிந்துரை செய்தது.

டெல்லியில் காற்று மாசுபாடு அதிகரிப்பதால் மக்களுக்கு கண் எரிச்சல், சுவாசிப்பதில் சிரமம் உள்ளிட்ட சுகாதார பாதிப்புகள் ஏற்படுகிறது. இந்நிலையில் டெல்லியில் நேற்று காலை காற்று தரக்குறியீடு (ஏகியூஐ) 391 என்ற மிக மோசமான நிலையில் இருந்தது. காற்று தரக் குறியீடு 350ஐ கடந்தால் 3ம் நிலை கிராப் கட்டுப்பாடுகளை அமல்படுத்த உச்ச நீதிமன்றம் கடந்த ஆண்டு உத்தரவிட்டுள்ளது. இந்நிலையில் இதுவரை டெல்லி அரசு இதனை அமல்படுத்தாதது குறித்து கேள்வி எழுந்துள்ளது.

# அமெரிக்கர்களுக்கு வரி வருவாயிலிருந்து ரூ.1.77 லட்சம் டிவிடெண்ட் வழங்கப்படும்: ட்ரம்ப் அறிவிப்பு



வாஷிங்டன், நவ.12-

அமெரிக்கர்களுக்கு வரி வருவாயிலிருந்து டிவிடெண்டாக தலா ரூ.1.77 லட்சம் வழங்கப்படும் என அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்க அதிபராக கடந்த ஜனவரி மாதம் பொறுப்பேற்ற டொனால்டு ட்ரம்ப், இறக்குமதியாகும் பொருட்களுக்கு அதை உற்பத்தி செய்யும் நாட்டைப் பொறுத்து 10 முதல் 50% வரை வரி விதித்தார். நீண்ட காலமாக நிலவும் வர்த்தக பற்றாக்குறையை சரி செய்யவே இந்த நடவடிக்கை என அவர் தெரிவித்தார். நாடாளுமன்ற ஒப்புதலைப் பெறாமல் மேற்கொண்ட இந்த நடவடிக்கையை எதிர்த்து அந்நாட்டு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இதை விசாரித்த உச்ச நீதிமன்றம், ட்ரம்ப் நடவடிக்கையின் சட்டபூர்வமான தன்மை குறித்து சந்தேகங்களை எழுப்பியது. இதனால் பல வரிகள் ரத்து செய்ய வாய்ப்பு உள்ளது.

இதனால் 100 பில்லியன் டாலருக்கும் அதிகமான பணத்தை திருப்பித் தர வேண்டிய நிலை ஏற்படும். இதனிடையே, தனது வர்த்தக கொள்கைகளுக்கு எதிராக உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கினால் அது ஒரு பேரழிவாக இருக்கும் என ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக வலைதளத்தில் ஞாயிற்றுக்கிழமை வெளியிட்ட பதிவில், “இறக்குமதி பொருட்கள் மீது அதிக வரி விதிப்பதால், அமெரிக்கா பணக்கார மற்றும் உலகில் மிகவும் மதிக்கப்படும் நாடாக மாறும். வரி விதிப்பு பற்றி குறை கூறுபவர்கள் முட்டாள்கள். வரி வருவாயிலிருந்து பெரும்பாலான அமெரிக்கர்களுக்கு (பணக்காரர்கள் தவிர) தலா 2 ஆயிரம் டாலர் விரைவில் டிவிடெண்டாக வழங்கப்படும்'' என பதிவிட்டுள்ளார்.

பொதுமக்களின் ஆதரவை திரட்டுவதற்காகவே, 2 ஆயிரம் டாலர் (ரூ.1.77 லட்சம்) வழங்க ட்ரம்ப் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. அதேநேரம் இந்த தொகை எப்படி வழங்கப்படும் என்ற குழப்பம் நிலவி வந்தது.

இதுகுறித்து அமெரிக்க நிதியமைச்சர் ஸ்காட் பெசன்ட் கூறும்போது, “பொதுமக்களுக்கான 2 ஆயிரம் டாலர் டிவிடெண்ட் தொகை பல்வேறு வழிகளில் வழங்கப்படும். குறிப்பாக, வரி குறைப்பு செய்ய ட்ரம்ப் திட்டமிட்டிருக்கலாம். அத்துடன் டிப்ஸ்கள், கூடுதல் நேரம் பணிபுரிய, சமூக பாதுகாப்பு, வாகன கடன் ஆகியவற்றுக்கு வரி விலக்கு வழங்க திட்டமிட்டிருக்கலாம்'' என்றார்.

# 33% மகளிர் இடஒதுக்கீட்டை அமல்படுத்த கோரி மனு: மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் நோட்டீஸ்



புதுடெல்லி, நவ.12-

மக்களவை, மாநில சட்டப்பேரவைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீட்டை அமல்படுத்தக் கோரி உச்ச நீதிமன்றத்தில் பொது நல மனு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இந்த மனு குறித்து பதில் அளிக்குமாறு மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டு உள்ளது.

மக்களவை, மாநில சட்டப்பேரவைகளில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்க வகை செய்யும் நாரி சக்தி வந்தன் மசோதா கடந்த 2023ம் ஆண்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. ஆனால் இந்த சட்டம் இதுவரை அமல்படுத்தப்படவில்லை. நாடு முழுவதும் வரும் 2027ம் ஆண்டு பிப்ரவரியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது. இதன்பிறகு மக்கள் தொகையின் அடிப்படையில் தொகுதிகள் மறுவரையறை செய்யப்படும்.

புதிய தொகுதிகளின் அடிப்படையில் 33 சதவீத மகளிர் இடஒதுக்கீடு அமல் செய்யப்படும். இதன்படி வரும் 2029ம் ஆண்டு மக்களவைத் தேர்தலின் போது மகளிர் இடஒதுக்கீடு அமலுக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சூழலில் காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெயா தாக்குர் உச்ச நீதிமன்றத்தில் பொதுநல மனுவை தாக்கல் செய்துள்ளார். அதில், “நாட்டின் மக்கள் தொகையில் 50 சதவீதம் பேர் பெண்கள். ஆனால் மக்களவை, சட்டப்பேரவைகளில் 4 சதவீத பெண் பிரதிநிதிகள் மட்டுமே உள்ளனர். 33 சதவீத மகளிர் இடஒதுக்கீடு சட்டம் எப்போது அமலுக்கு வரும் என்பது யாருக்கும் தெரியவில்லை. இந்த சட்டத்தை உடனடியாக அமல் செய்ய வேண்டும்'' என்று கோரப்பட்டு உள்ளது. நீதிபதிகள் நாகரத்னா, மகாதேவன் அமர்வு முன்பு நேற்று வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் கூறியதாவது: இந்திய மக்கள் தொகையில் பாதி அளவுக்கு பெண்கள் உள்ளனர். ஆனால் மக்களவை, சட்டப்பேரவைகளில் பெண்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் இல்லை. இந்தியாவின் மிகப்பெரிய சிறுபான்மை சமூகமாக பெண்கள் உள்ளனர். இடஒதுக்கீட்டை அமல் செய்யக் கோரி நீதிமன்றத்தை அவர்கள் நாடும் சூழல் இருக்கிறது. மத்திய அரசின் கொள்கை முடிவுகளில் நீதிமன்றம் தலையிட முடியாது. எனவே இந்த மனு குறித்து மத்திய அரசு விரிவான பதில் மனுவை தாக்கல் செய்ய வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் தெரிவித்தனர். நீதிபதிகளின் உத்தரவின்படி மத்திய அரசுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு உள்ளது. மத்திய அரசு பதில் மனுவை தாக்கல் செய்த பிறகு தொடர்ந்து விசாரணை நடத்தப்படும்.

# “திமுகவை விரட்ட அதிமுக ஒன்றுசேர வேண்டும்” பாஜக மாநில பொதுச் செயலாளர் கார்த்தியாயினி நேர்காணல்



சென்னை, நவ.12-

அதிமுகவில் இருந்து பாஜகவுக்கு 2017ல் சென்ற கார்த்தியாயினி, தற்போது பாஜக மாநில பொதுச் செயலாளராக உள்ளார். வேலூர் மாநகராட்சி மேயராக பணியாற்றியதோடு, 2024 மக்களவைத் தேர்தலில் சிதம்பரம் தொகுதியில் விசிக தலைவர் திருமாவளவனை எதிர்த்து போட்டியிட்ட அனுபவமும் கொண்டவர். தமிழக அரசியல் நிலவரம், அதிமுகவின் உட்கட்சி பிரச்சினை, கட்சிகளில் பெண்களுக்கான பிரதிநிதித்துவம் போன்றவை குறித்து ‘இந்து தமிழ் திசை’யிடம் தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார் கார்த்தியாயினி. அவரது பேட்டியிலிருந்து...

அதிமுகவில் இருந்து பாஜகவில் இணைந்த உங்களுக்கு கட்சியில் உரிய அங்கீகாரம் கிடைக்கிறதா?

பாஜகவில் பெண்களுக்கான அங்கீகாரம் சிறப்பாக இருக்கிறது. குறிப்பாக உழைப்பவர்கள் அங்கீகரிக்கப்படுகிறார்கள். கட்சியில் இணைந்ததும், மாநில மகளிர் அணி செயலாளர், பாஜக மாநில செயலாளர் பதவிகள் வழங்கப்பட்டது. தற்போது மாநில பொதுச் செயலாளராக 2வது முறை பதவி வகிக்கிறேன். கட்சி கொடுக்கும் பொறுப்பை திறம்பட நேரம் ஒதுக்கி செய்பவர்களுக்கு அதற்குரிய முழு அங்கீகாரத்தை பாஜக வழங்கும்.

நாம் தமிழர் கட்சியைத் தவிர வேறு எந்தக் கட்சியும் மகளிருக்கு உரிய இடங்களை ஒதுக்குவதில்லையே? உங்கள் கட்சியில் மகளிருக்கு 33 சதவீதம் இடங்களை ஒதுக்கும்படி கேட்டு குரல் கொடுப்பீர்களா?

நாம் தமிழர் கட்சியில் அங்கீகாரம் கிடைக்கவில்லை என அந்த கட்சியில் இருந்து ஒரு பெண் விலகி வெளியேறி விட்டார். பாஜகவில் பெண்களுக்கு சம உரிமை வழங்கப்படுகிறது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டே நான் தான். நான் ஒரு பட்டியலின சமுதாயத்தை சார்ந்த பெண். இருந்த போதிலும், இங்கு சாதியை பார்க்கவில்லை. அவர்களுடைய உழைப்பை மட்டும் பார்த்து அங்கீகாரத்தை கொடுத்துள்ளனர். இதேபோல, மாநில செயலாளர், மாவட்ட தலைவர், மண்டல் தலைவர் என அனைத்து பொறுப்புகளிலும் பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. பெண்களுக்கு இடஒதுக்கீடு என பலரும் சொல்லுவதற்கு முன்பே, அதை செயல்படுத்தி காட்டியது பாஜக தான்.

தமிழகத்தில் உங்கள் கூட்டணி ஆட்சியைப் பிடிப்பது எந்த அளவுக்கு முக்கியத்துவம் என்று கருதுகிறீர்கள்?

தமிழகத்தில் எங்கள் கூட்டணி ஆட்சியை பிடிப்பது அதி முக்கியத்துவம் வாய்ந்தது. இதற்காக தேசிய ஜனநாயக கூட்டணியில் உள்ள ஒவ்வொரு தொண்டனும் முழு வேகத்துடன் களப்பணியில் ஈடுபட்டு கொண்டிருக்கிறார்கள்.

பிரிந்து கிடக்கும் அதிமுகவால் உங்கள் கூட்டணிக்கு கிடைக்க வேண்டிய வாக்குகள் பாதிக்காதா?

அதிமுகவில் சில சொற்பமான அளவில் கருத்து வேறுபாடு காரணமாக கட்சி கட்டுப்பாட்டை மீறி செயல்படுபவர்கள் மீது அதிமுக தலைமை நடவடிக்கை எடுக்கிறது. அதிமுகவில் கடைசி தொண்டன் இருக்கும் வரை, எம்ஜிஆர் பாட்டை கேட்கும் போதும், ஜெயலலிதா பேச்சு ஒலிக்கும் போதும் அங்கு இரட்டை இலை சின்னத்துக்காக தொண்டர்கள் உழைத்து கொண்டே தான் இருப்பார்கள். எனவே, எங்களுக்கு பாதிப்பு வராது.

அதிமுகவை ஒருங்கிணைக்க வேண்டும் என பாஜக தன்னிடம் கூறியதாக செங்கோட்டையன் கூறியிருக்கிறாரே?

சிறு சிறு மனஸ்தாபங்களுடன் பிரிந்து கிடப்பவர்களை, ஒன்று சேருங்கள் என்று தான் பாஜக கூறியதே தவிர, பிரிந்து செல்லுங்கள் என்று சொல்லவில்லையே. தீயசக்தி திமுகவை விரட்டி அடிக்கவேண்டுமென்றால், எப்பாடுபட்டாவது பிரிந்தவர்கள் ஒன்றுசேர வேண்டும். இனிவரும் காலங்களில் பிரிவு என்ற சொல்லே இருக்க கூடாது.

பாஜக கூட்டணியில் கூடுதலாக எந்தக் கட்சி வந்தால் உங்கள் கூட்டணி இன்னும் பலமாக மாறும் என்று நினைக்கிறீர்கள்?

இப்போது இருக்கும் கூட்டணியே நல்ல பலமான கூட்டணி தான். தீயசக்தி திமுகவை விரட்டி அடிக்க, ஊழல் அற்ற ஆட்சியை மக்களுடைய நலனுக்கு கொடுப்பதற்காக, தேசிய ஜனநாயக கூட்டணியில், ஒருமித்த கருத்தோடு, எங்களுடைய சித்தாந்தத்தை ஏற்று யார் வருவதாக இருந்தாலும் எங்களுடைய கூட்டணி கதவு திறந்திருக்கும்.

மகளிர் வாக்குகளைக் கவர பாஜக என்ன திட்டம் வைத்திருக்கிறது?

கிராமபுறம் முதல் நகர்புறம் வரை அனைத்து மகளிரின் வாழ்வாதாரத்தை உயர்த்த பிரதமர் மோடி ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அதிமுகவும், பாஜகவும் பெண்களை மேண்மைபடுத்துவதற்காக பல திட்டங்களை கொண்டு வந்திருக்கிறது. எனவே, பெண்களுக்காக புதிய திட்டங்கள் எதுவும் கொண்டு வர வேண்டியதில்லை. ஏற்கெனவே நிறைய திட்டங்கள் இருக்கிறது. அந்த திட்டங்கள் அனைத்தும், இடைத்தரகர்கள் இல்லாமல், பெண்களிடம் கொண்டு சேர்க்கும் முயற்சியில் நாங்கள் ஈடுபட்டு வருகிறோம். ஆனால், திமுக பெண்களுக்காக ஒரு திட்டத்தை கொண்டு வந்து, அந்த திட்டத்தில் பயனடையும் பெண்களை, ‘ஓசி’ உள்ளிட்ட அநாகரீக வார்த்தைகளால் திட்டுகிறார்கள்.

ராகுலின் ஓட்டுத் திருட்டு குற்றச்சாட்டு எந்த அளவுக்கு தேர்தலில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதுகிறீர்கள்?

எந்த ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தாது. அவருக்கு தான் பின்னடைவை ஏற்படுத்தி இருக்கிறது. பாஜக எந்த ஒரு குற்றச்சாட்டையும் ஆதாரத்துடன் வெளியிடுகிறது. இவர்கள் வாய்வார்த்தைகளால் மட்டுமே குற்றச்சாட்டை முன் வைக்கிறார்கள்.

அரசியலில் மகளிரின் பங்களிப்பு போதுமான அளவில் இருக்கிறதா? புதிதாக அரசியலுக்கு வரும் மகளிருக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

அனைத்து துறைகளிலும் பெண்கள் நாங்கள் வந்துவிட்டோம் என சொல்வதைக் காட்டிலும், இன்னும் எண்ணற்ற துறைகளில் பெண்களை கொண்டு வருவதற்கான சக்தியாக, களமாக இருப்பது அரசியல் தான். கல்வி அறிவு மட்டுமல்ல, திறமை மிக்க பெண்கள் அனைவரும் அரசியலுக்கு வர வேண்டும். வாக்களிப்பது எப்படி ஒரு ஜனநாயக கடமையோ, அதேபோல், பெண்கள் ஒவ்வொருவரும் அரசியலுக்கு வருவதை ஜனநாயக கடமையாக ஏற்று வர வேண்டும்.

2026 சட்டப்பேரவை தேர்தலை எதிர்கொள்வீர்களா?

கண்டிப்பாக எதிர்கொள்வேன். பாஜகவில் எனக்கு கீழ்வைத்தினாங்குப்பம் (கே.வி.குப்பம்) தொகுதியில் பொறுப்பாளராக நியமித்திருக்கிறார்கள். தற்போது, அந்த தொகுதியில் நான் முழு கவனம் செலுத்தி வருகிறேன். அந்த தொகுதியில் மக்கள் பணி செய்ய எதிர்பார்த்து காத்திருக்கிறேன்.



# திருப்பதி மலைப்பாதையில் மாமிசம் உண்ட தேவஸ்தான ஊழியர்கள் பணி நீக்கம்

திருப்பதி, நவ.12-

திருப்பதியில் இருந்து திருமலைக்கு மாமிசம், மதுபானம், சிகரெட், போதைப் பொருட்கள் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மதியம் திருப்பதி அலிபிரி பாதாலு மண்டபம் அருகே, தேவஸ்தான ஒப்பந்த ஊழியர்களான ராமசாமி, சரசம்மாள் ஆகியோர் துப்புரவு தொழிலாளர்களுடன் அமர்ந்து மாமிச உணவை சாப்பிட்டுள்ளனர். இதனை அப்பக்கம் நடந்து செல்லும் பக்தர் கள் பார்த்து அதிர்ச்சி அடைந்து அவர்களை கண்டித்தனர். ஆனாலும், அவர்கள் தொடர்ந்து சாப்பிட்டதால், அதனை வீடியோ எடுத்து சமூக வலைத்தளத்தில் வெளியிட்டனர்.

இது வைரல் ஆனது. நேற்று இது தொடர்பாக தேவஸ்தான விஜிலென்ஸ் அதிகாரிகள் சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரணை நடத்தினர். இந்த சம்பவம் உண்மைதான் என தெரியவந்ததையடுத்து அவர்கள் மீது திருமலை 2வது காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. மேலும், அவர்கள் இருவரையும் பணி நீக்கம் செய்து அதற்கான உத்தரவும் நேற்று பிறப்பிக்கப்பட்டது.

# திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு கடந்த 5 ஆண்டுகளில் 68 லட்சம் கிலோ கலப்பட நெய் விநியோகம்



திருமலை, நவ.12-

ஆந்திராவில் ஜெகன் மோகன் ரெட்டி முதல்வராக இருந்தபோது, திருமலை திருப்பதி தேவஸ்தானத்தில் லட்டு பிரசாதம் தயாரிக்க கலப்பட நெய் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து சிபிஐ தலைமையிலான சிறப்பு ஆய்வு குழு விசாரணை நடத்தி வருகிறது. சமீபத்தில் இக்குழு முன்னாள் அறங்காவலர் குழு தலைவர் ஒய்வி. சுப்பாரெட்டியின் உதவியாளரை கைது செய்தது.

இவர் கொடுத்த தகவலின் படி, உத்தராகண்டின் போலே பாபா ஆர்கானிக் டையரி நிறுவனத்திற்கு நெய்யில் கலப்படம் செய்ய சில ரசாயனங்களை விநியோகம் செய்த அஜய் குமார் சுகந்த் என்பவரை கைது செய்துள்ளது. இவரிடம் நடத்திய விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

பிரசாதம் தயாரிக்க ஜெகன்மோகன் ரெட்டியின் ஆட்சி காலத்தில் உத்தராகண்ட் மாநிலத்தில் உள்ள போலேபாபா டையரிக்கு ஒப்புதல் வழங்கியது. ஆனால், இங்கிருந்து தரமற்ற நெய் விநியோகம் செய்ததால் இதனை 2022ல் பிளாக் லிஸ்ட்டில் வைத்தது. இதனை தொடர்ந்து,

தமிழகத்தில் உள்ள ஏஆர் டையரி, திருப்பதி அருகே உள்ள வைஷ்ணவி டையரி, உத்தர பிரதேசத்தில் உள்ள மால் கங்கா டையரி ஆகியோர் மூலம் போலேபாபா டையரி நிறுவனத்தாரே திருப்பதி தேவஸ்தானத்திற்கு நெய் விநியோகம் செய்துள்ளனர்.

ஒரு லிட்டர் பால் கூட உற்பத்தி செய்யாத இந்த நிறுவனம் ரூ.250 கோடிக்கு டெண்டர் எடுத்து 68 லட்சம் கிலோ கலப்பட நெய்யை 5 ஆண்டுகளுக்கு விநியோகம் செய்துள்ளது. இந்நிலையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்டதும், கடந்த ஆண்டு ஜூலை மாதம் திண்டுக்கல் ஏஆர் டையரியில் இருந்து திருப்பதி தேவஸ்தானத்திற்கு வந்த 4 கன்டெய்னர்களை ஆய்வு செய்து,

அதில் கலப்படம் உள்ளதாக அந்த லாரிகளை திருப்பி அனுப்பினர்.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் திருப்பதி அருகே உள்ள வைஷ்ணவி டையரியில் மீண்டும் நெய் வாங்கப்பட்டது. ஆனால், ஜூலை மாதம் திருப்பி அனுப்பப்பட்ட நெய்யையே இவர்கள் லேபிள் மாற்றி அனுப்பியதும் விசாரணையில் தெரியவந்துள்ளது. கலப்பட நெய் விவகாரத்தில் முன்னாள் அறங்காவலர்கள், அதிகாரிகளுக்கு தொடர்பு உள்ளதா? என சிபிஐ விசாரணை நடத்த உள்ளது.

# பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் வரை மாநிலங்களுக்கு இடையே ஆம்னி பேருந்துகள் இயக்கப்படாது என உரிமையாளர்கள் அறிவிப்பு

சென்னை, நவ.12-

தமிழகத்தில் இருந்து கடந்த 7ம் தேதி கேரளாவுக்கு சென்ற 30க்கும் மேற்பட்ட ஆம்னி பேருந்துகளை அம்மாநில போக்குவரத்து துறை சிறைபிடித்து ரூ.70 லட்சத்துக்கும் மேல் அபராதம் விதித்தது. இதேபோல், கடந்த 7 நாட்களாக கர்நாடக போக்குவரத்து துறையும் தமிழக பதிவெண் கொண்ட 60க்கும் மேற்பட்ட ஆம்னி பேருந்துகளை தடுத்து ஒவ்வொரு பேருந்துக்கும் ரூ. 2.20 லட்சம் வரை அபராதம் விதித்தது.

இதுகுறித்து பேருந்து உரிமையாளர்கள் கேட்ட போது, ''2021ம் ஆண்டு மத்திய அரசால் உருவாக்கப்பட்ட ‘ஆல் இந்தியா டூரிஸ்ட் பெர்மிட்’ படி தமிழகத்தில் அண்டை மாநில பேருந்துகளுக்கு சாலை வரி வசூலிக்கப்படுகிறது. எனவே, நாங்களும் வசூலிக்கிறோம்'' என கேரள, கர்நாடக போக்குவரத்துறையினர் தெரிவித்தனர். இந்நிலையில், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா, புதுச்சேரி இடையே இயக்கப்பட்டு வரும் ஆம்னி பேருந்துகள் இயக்கப்படாது என்று அந்தந்த மாநில ஆம்னி பேருந்துகளின் உரிமையாளர்கள் சங்கம் கூட்டாக அறிவித்துள்ளது.

இதுகுறித்து, ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் கூறும்போது, ''மாநிலங்களுக்கு இடையே இயக்கப்படும் ஆம்னி பேருந்துகளுக்கு காலாண்டுக்கு தமிழக சாலைவரி ரூ.1,50,000, ஆல் இந்தியா டூரிஸ்ட் பெர்மிட் சாலை வரி ரூ.90,000 மற்றும் கேரளா, கர்நாடகா சாலை வரி சுமார் ரூ.2 லட்சம் என மொத்தம் ரூ.4.50 லட்சம் செலுத்தி பேருந்துகளை இயக்க முடியாத சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். ஆம்னி பேருந்துகளுக்கு தனித்துவமான பெர்மிட்டை மத்திய அரசு வழங்க வேண்டும்.

வரித்திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை. தமிழக அரசு இந்த பிரச்சினையில் தலையிட்டு நிரந்தர தீர்வு காண வேண்டும்'' என்றனர். இதனிடையே, தமிழக போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கரை ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் நேற்று சந்தித்து கோரிக்கைகளை முன்வைத்தனர். இதுகுறித்து அதிகாரிகளுடன் கலந்து ஆலோசிப்பதாக அமைச்சர் தெரிவித்தார். இந்த பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படாத நிலையில், அரசுடன் பேச்சுவார்த்தை தொடர்வதால் இனி மாநிலங்களுக்கு இடையே ஆம்னி பேருந்துகள் இயக்கப்படாது.

மாநிலத்துக்குள் மட்டுமே பேருந்துகள் இயக்கப்படும் என ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் தெரிவித்தனர். பயணிகளின் வசதிக்காக, அரசு விரைவு போக்குவரத்து கழகம் மூலம் ஆந்திராவுக்கு 70 பேருந்துகளும், கர்நாடகாவுக்கு 183 பேருந்துகளும், கேரளாவுக்கு 85 பேருந்துகளும் இயக்க பெரிமிட் உள்ளது. தேவை இருக்கும் பட்சத்தில் கூடுதல் பேருந்துகள் இயக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000